# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 39-2020*

## கல்வி

கடந்தவாரங்கள் போன்று வழங்கப்பட்ட நேரத்தில் அதே விதிமுறைகளுடன் பாடசாலை நடைபெறும்.

வழங்கப்பட்ட அனைத்து விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்கும்வண்ணம் அன்போடு வேண்டுகின்றோம்.

**முக்கிய குறிப்பு:** *நோய் தொற்றும் ஆபத்தான குழுவில் (Risiko gruppe-வில்) மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் இருக்கும் காரணத்தினால் தங்கள் பிள்ளைகள் பாடசாலை வரமுடியாமல் போனால் விரைவில் எம்மோடு தொடர்புகொள்ளவும்.*

வகுப்பறைச்சந்திப்புகள் மிகச்சிறப்பாக இணையவழியினூடாக நடைபெற்று வகுப்புப்பிரதிநிதிகள் 2020-2021 தெரிவுசெய்யப்பட்டுவருகின்றனர்.

## கலை

நவராத்திரி விழா 24.10.2020 சனிக்கிழமை அன்று தற்போதைய விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.முழுவிபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

சங்கீதக் கலைவகுப்புகள் நடனக் கலைவகுப்புகள் வழமைபோல் தமிழ் வகுப்புக்கள் முடிவடைந்தவுடனும் தற்போதய விதிமுறைகளுக்கமையவும் நடைபெறும்.

## பெற்றோர்குழுத்தெரிவு

அனைத்து வகுப்புகளுக்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டபின்பு அவர்களுக்கான சந்திப்பொன்றினை ஒழுங்குசெய்து அவர்கள்மூலம் பெற்றோர்குழுவின் பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

**கிழமை இல. 40-2020 அதாவது 03.10.2020 சனிக்கிழமை அன்று இலையுதிர்கால விடுமுறையாக அறிவிக்கின்றோம்.**

பாடசாலை நேரம்

*சனிக்கிழமை*

1. சிறுவர் - மழலையர் - ஆரம்பம் - 09:30-12:00 (மேல் கட்டடம்)
2. 1ம் வகுப்பு - 4ம் வகுப்பு வரை - 09:30-12.20 (மேல் கட்டடம்)
3. 5ம் வ. - 11ம் வ.-வரை (வளர்பிறை உட்பட) - 09.30-12.30 (கீழ் கட்டடம்)
4. நடனம் (மாணவர்கள் அழைத்துச்செல்லப்படுவர்) 12:10-13:40 (மேல் கட்டடம்)
5. சங்கீதம் (மாணவர்கள் அழைத்துச்செல்லப்படுவர்) 12:40-13:45 (மேல் கட்டடம்)

*மாணவர்களின் சந்திப்பு நேரம்: 09.15 - 09.25*

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**
**தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!**